**Starting time 11.22 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 198/2014**

Deposition of **<u>D.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 03.01.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u> நான் இந்த வழக்கில் 2-ஆம் பிரதிவாதி என்றால், சரிதான். 1-ஆம் பிரதிவாதி, வாதி மற்றும் எனக்கும் தந்தை என்றால், ஆமாம். 3-ஆம் பிரதிவாதி எனது மனைவி என்றால், ஆமாம். நான் கால்நடை மருத்துவராக பணியாற்றி வருகிறேன் என்றால், ஆமாம். என்னுடைய தந்தை வழி பாட்டனார் பெயர் ராமசாமி உடையார் என்றால், ஆமாம். ராமசாமி உடையாரின் ஒரே மகன்தான் என்னுடைய தகப்பனார் என்றால், ஆமாம். ராமசாமி உடையாருக்கு 19.01.1933 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து தான் தாவா சொத்து என்றால், ஆமாம்.

2. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் ராமசாமி உடையாருக்கு பாத்தியப்பட்ட சொத்து 15 ஏக்கர் இருக்குமென்றால், எனக்கு சரியாக தெரியாது, 10 ஏக்கருக்கு மேல் இருக்கும். நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால், 1972 ல் பிறந்தேன். நான் எப்போது கால்நடை மருத்துவம் படித்தேன் என்றால், 2000 ஆம் ஆண்டு ஆகும். 1995-லேயே நான் கால்நடை மருத்துவம் முடித்துவிட்டேன் என்றால், அது தவறு.

3. என்னுடைய பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால், 3 பேர். அவர்கள் என்ன

படித்துள்ளார்கள் என்றால், 10-ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தான் படித்துள்ளார்கள். என் சகோதரிகளுக்கு திருமணம் எனது தாத்தா நடத்தி வைத்தார் என்றால், தாத்தா, அப்பா இருவருமே சேர்ந்து தான் நடத்தி வைத்தார்கள் எனது தாத்தா ராமசாமி உடையாருக்கும், தகப்பனாருக்கும் இடையே 1992-ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால், ஆமாம். அந்த பாகப்பிரிவினைப்பத்திரத்தில் இந்த தாவா சொத்து D அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

4. 1986 முதல் 1993 வரை எனது தகப்பனாரும், பாட்டனாரும் சுமார் 11 ஏக்கர் நிலத்தை விற்றுள்ளார்கள் என்றால், நான் அப்போது இளவராக இருந்ததாலும், படித்து கொண்டிருந்ததாலும் எனக்கு அது பற்றிய விவரம் தெரியாது. என் தகப்பனார் சொத்துக்ளை விற்றுதான் மகள்களின் திருமணத்தையும் மகன்களின் படிப்பு செலவிற்கும் செலவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளது சரிதானே என்றால், எனக்கு அதுபற்றி சரியாக தெரியாது. என் தகப்பனார் அரசு உத்யோகத்திலும் இல்லை, எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால், சரியல்ல, எங்கள் குடும்பமே விவசாய குடும்பம், விவசாயம் பார்த்து வந்தார்.

5. விவசாயத்தில் வருமானம் இல்லாத காரணத்தினால் தான் சுமார் 11 ஏக்கர் நிலத்தை விற்று எனது தகப்பனார் என்னுடைய படிப்பு செலவு செய்தார் என்றால், இல்லை. என் தகப்பனாருக்கு விவசாயத்தில் எந்த வருமானமும் இல்லாததால் தான் நிலத்தை விற்று என்னுடைய சகோதரிகளின் திருமண செலவையும், என்னுடைய படிப்பு செலவையும் செய்தார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.9 பாகப்பிரிவினை பாத்திரத்தில் 1 ஏக். 10 செண்ட் நிலம்தான் 1-ஆம் பிரதிவாதிக்கு பிரிந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரியாக தெரியாது. வாதி அரசு பள்ளியிலும், அரசு கல்லூரியிலும் தான் படித்தார் என்றால், நாங்கள் அனைவருமே அரசு பள்ளியிலும், அரசு கல்லூரியிலும் தான் படித்தோம்.

6. வாதி தன்னுடைய விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான். அவருடைய திருமணத்திற்கு நான் சென்றிருந்தேன் என்றால், நான் அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன் எனக்கு அழைப்பில்லை, அதனால் நான் செல்லவில்லை. என் தகப்பனார் அந்த திருமணத்திற்கு சென்றது குறித்து எனக்கு தெரியுமா என்றால், அப்போது தெரியாது. பிறகு சொன்னார்கள். நான் 2004-ஆம் ஆண்டு திருமணம் செய்தேன் என்றால்,

ஆமாம்.

7. என் திருமணத்திற்கு என் தகப்பனாருக்கு அழைப்பு விடுத்தேனா என்றால், அழைப்பிதழ் கொடுத்தேன் வாதி என் தாயாரை அடித்ததால் என் தாயார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு என் பெற்றோர்களால் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனக்கும் வாதிக்கும் எப்போதிருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால், 1994-ல் எனக்கு கால்நடை மருத்துவ படிப்பு படிக்க சீட்டு கிடைத்த போது பொது பணத்தில் செலவு செய்து என்னை படிக்க வைக்க கூடாது என வாதி கூறினார், அதிலிருந்து பேச்சு வார்த்தை இல்லை.

8. என் தகப்பனார் தான் என்னை கால்நடை மருத்துவ படிப்பு படிக்க வைத்தார் என்றால், இல்லை. நான் சொந்தமாக கோழிப்பண்ணையில் வேலை பார்த்துக் கொண்டு படிப்பு படித்தேன். என்னுடைய பதிலுரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ மேற்படி சங்கதியை கூறியுள்ளேனா என்றால், இல்லை. கால்நடை மருத்துவ படிப்பானது காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரையிலும் வகுப்பு நடைபெறும் என்றால், காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வகுப்பு நடைபெறும். என்னுடைய தாயார் 2010-ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால், ஆமாம். என்னுடைய தாயார் இறப்புக்கு நான் செல்லவில்லை என்றால், தாமதமாகத்தான் தகவல் சொன்னார்கள், நான் செல்ல இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டார்கள்.

9. நான் எனது பெற்றோருடன் பேசாமல் இருந்ததால் தான் என் தாயார் இறப்புக்கு கூட நான் செல்லவில்லை என்றால், சரியல்ல, செல்ல இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டார்கள். எனது தாயார் இறந்த போது நான் எந்த ஊரில் இருந்தேன் என்றால், ஆந்திராவில் இருந்தேன். என் தகப்பனார் பியூசி படித்துள்ளார் என்றால், ஆமாம். என் தகப்பனார் எப்போதும் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவார் என்றால், ஆமாம். என் தகப்பனார் பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்தை முழு சுதந்திரத்துடம் அவர் அனுபவித்து வந்தார் என்றால், ஆமாம். அவருக்கு பாகப்பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதி வைக்க என் தகப்பனாருக்கு முழு உரிமை உண்டு என்றால், சரிதான்.

10. 2010-ல் என் தாயார் இறந்த சமயத்தில் என் தகப்பனார் வாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால், அந்த சமயத்தில் தெரியாது. என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் என் தகப்பனாரை அழைத்து சென்று வாதி

மோசடியாக தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தி விட்டார் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன். என் தகப்பனார் எந்த ஒரு ஆவணத்தையும் கையொப்பம் போடுவதற்கு முன்பாக படித்து பார்த்துவிட்டுதான் கையொப்பம் போடுவார் என்றால், சாட்சி முதலில் சரி என்று கூறிவிட்டு, பின்னிட்டு எல்லா நேரங்களிலும் அவ்வாறு செய்யமாட்டார் என்று கூறுகிறார்.

11. என் தகப்பனார் என்னிடம் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தபிறகு ஒரு பிழை திருத்த பத்திரம் ஏற்படுத்தியது சம்மந்தமாக கூறினாரா என்றால், தானசெட்டில்மெண்ட் பத்திரம், பிழை திருத்த பத்திரம் இரண்டுமே மோசடியாக தயாரிக்கப்பட்டதாக கூறினார். எப்போது என்னிடம் அவர் கூறினார் என்றால், 2012, 2013 என்று நினைக்கிறேன், சரியாக நினைவில் இல்லை. வாதிக்கு என் தகப்பனார் எழுதி வைத்த வா.சா.ஆ.28-ல் என் தகப்பனார் தான் மனப்பூர்வமாக வாதிக்கு எழுதி வைக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல.

12. தான செட்டில்மெண்ட் பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டிருந்தால் மீண்டும் என் தகப்பனார் பிழை திருத்த பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்திருக்கமாட்டார் என்றால், சரியல்ல, பிழைதிருத்தம் பத்திரம் எழுதியபோதும் வாதி மோசடி செய்தது குறித்து தெரியாது. வாதி மோசடி செய்தது குறித்து என் தகப்பனாருக்கு எப்போது தெரிய வந்ததாக என்னிடம் கூறினார் என்றால், 2013-ஆம் ஆண்டு இறுதியில் கூறினார். என் தகப்பனார் முழு மனதுடன் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததன் பேரில் தான் வாதியின் பேருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டு அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால், மோசடியாக செய்துள்ளார். அந்த பட்டா மாறுதலை ரத்து செய்ய நானோ எனது தகப்பனாரோ வருவாய் துறையினரிடம் மனு கொடுத்துள்ளோமா என்றால், நான் கொடுக்கவில்லை, என் தகப்பனார் கொடுத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 11.56 A.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.